# வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்



ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
தேவஸ்தானம் ஹேகித்த வத்தளை
ශ්‍රී සිව සුබ්‍රමනියස්වාමි දේවස්ථානය
හේකිත්ත වත්තල

# மஹா கும்பாபிஷேகம்

## 29.11.96

# சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

பிடியதனுருவுமை
கொளமிகு கரியது
வடிகொடு தனதடி
வழிபடு மவரிடம்
கடகணபதிவர
அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி
வலமுறை இறையே

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ சிவசுப்பிரணிய சுவாமி தேவஸ்தானம், ஹேகித்த, வத்தளை.

## ஆலயம் பிறந்த வரலாறு

வத்தளை ஹேகித்தயில் இன்று 40 ஆண்டுகளுக்கு முன் இங்குள்ள தொழு நோயாளர் வைத்தியசாலை வளவுக்குள் நோயாளர்களின் தரிசனத்துக்காக கொழும்பு விவேகானந்த சபையினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம் சைவ பிணியாளர் சங்கத்துக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

1982ம் ஆண்டு வரை நோயாளர்களே ஆலயத்தை பராமரித்து வந்தனர். நாளடைவில் நோயாளர்களின் வருகை குறைந்ததால் ஆலயத்தின் செயற்பாடுகளும் குறைந்து கவனிப்பாரற்ற நிலையில் இருள் சூழ்ந்து கிடந்தது.

இதனைக் கண்ணுற்ற வத்தளை வாழ் சைவ அன்பர்கள் சிலர் ஒன்று கூடி "வத்தளை தெய்வநெறி பொதுப்பணி மன்றம்" என்ற ஒரு மன்றத்தை உருவாக்கி கொழும்பு விவேகானந்தசபை. அரச சுகாதார அமைச்சு இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு சைவப் பணியாளர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆலயத்தை கையேற்று பொது மக்களின் தரிசனத்துக்காக புறம்பான ஒரு வழி அமைத்து பூஜை. தரிசனங்கள் மட்டும் நடாத்தி வந்தனர்.

அதன்பின் 1991ம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி விநாயகப் பெருமானுக்கு பாலஸ்தாபன பூர்வாங்கக் கிரியைகள் நடாத்தப்பட்டு ஆலய திருப்பணி வேலைகளையும் மேற்படி மன்றம் நடாத்தியது. நாளடைவில் ஆலயத்துக்கு பல இடையூறுகள் ஏற்பட்டதால் திருப்பணி வேலைகள் நிறுத்தப்பட்டு. வழிபாடுகள் மாத்திரமே நடந்தன.

1995ம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி மீண்டும் திருப்பணி வேலைகளை தொடருவதற்கு திருமுருகப் பெருமான் திருவருள் பாலித்ததையடுத்து மூலஸ்தான பூர்வாங்க கிரியைகள் நடாத்தப்பட்டு, ஒரு பெரிய ஆலயத்துக்குரிய சகல பரிவார மூர்த்திகளும் அமைக்கப்பட்டு. மங்களகரமான தாது வருஷம் 1996ம் ஆண்டு கார்த்திகை 14ம் திகதி (29.11.96) வெள்ளிக்கிழமை கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதம குரு பிரதிஷ்டா பூஷணம் பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாத குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**இக் காலகட்டங்களில் எமக்கு எல்லாவிதத்திலும் உதவி ஒத்துழைப்பு வழங்கிய அவ்வப்போதிருந்த இரு அரசாங்கங்களுக்கும், கொழும்பு விவேகானந்த சபை, சைவப்பிணியாளர் சங்கம், அரச சுகாதார அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு, ஆகியவற்றுக்கும் நல்மனம் படைத்த வர்த்தக பிரமுகர்களுக்கும் சகல அடியார்களுக்கும் எமது ஆலய பரிபாலன சபை மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.**

சுபம்

இப்படிக்கு
ஆலய பரிபாலன சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஸ்ரீ சிவசுப்பிரணிய சுவாமி தேவஸ்தானம், ஹேகித்த, வத்தளை.

வத்தளை ஹேகித்தயில் அமையப்பெற்ற இவ்வாலயத் திருப்பணி வேலைகளையும் மங்களகரமான தாது வருஷம் 1996ம் ஆண்டு கார்த்திகை 14ம் திகதி வெள்ளிக்கிழமை (29.11.96) அன்று மஹா கும்பாபிஷேகத்தையும் நடாத்தி, ஸ்ரீ சிவசுப்பிரமணிய பெருமானின் இஷ்ட சித்திகளை சகல மக்களும் பெற்றுய்யும் வண்ணம் ஆக்கமும் ஊக்கமும் அளித்து அயராதுழைத்த ஆலய பரிபாலன சபையினர்:

**திரு. ரவி சிவகுமார்** — **ஆலய பரிபாலன சபைத் தலைவர்**
**திரு. M. முத்துக்குமார்** — " " **பொதுச் செயலாளர்**
திரு. K. கணேசன் — " " **இணைச் செயலாளர்**
**திரு. M. சண்முகவேல்** — " " **பொருளாளர்**
**திரு. S. ஆறுமுகம்** — " " **உப பொருளாளர்**

**பிரதம காப்பாளர்கள்**

**திரு. M.P. பாலதுரை**
**திரு. A முத்தையா**
திரு. R. கந்தசாமி
**திரு. K. தமிழ்வாணன்**
திரு. P. சண்முகராஜா

**ஆலய பிரதம குரு R. பாலசுப்பிரமணிய சர்மா**

**ஆலய திருப்பணிக் குழுவினர்**

திரு. M. ஜெயக்குமார்
திரு. P. சிவலிங்கம்
திரு. K. சந்திரன்
திரு. V. ஜெயராஜ்
திரு. P. நவராஜா
திரு. V. சுப்பிரமணியம்
திரு. M. பாலசுப்பிரமணியம்
திரு. S. ரவிச்சந்திரன்
திரு. S. நடராஜா
திரு. M. இரத்தினம்
திரு. K. பூவலிங்கம்
திரு. M. சுப்பிரமணியம்
திரு. N. வீரையா

1990ம் ஆண்டு இவ்வாலயத்தை கொழும்பு விவேகானந்த சபை, சைவ பணியாளர் சங்கம், அரச சுகாதார அமைச்சு ஆகியவற்றினூடாக கையேற்று, பாலஸ்தாபன கிரியைகளை சிறப்பாக நடாத்தி முடித்து ஆலய திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்த வத்தளை தெய்வ நெறி பொதுப்பணி மன்றத்தில் அவ்வப்போதிருந்த நிர்வாக சபையினரும், ஆலய தொண்டு புரிந்த குருக்கள்மாரும்:-

ஆலய குருக்கள்: ஜெகநாதக் குருக்கள்
P.பிரபாகர சர்மா
ரத்னசாமிக் குருக்கள்

திரு. S. கிஸோர்குமார்
செல்வி. S. இந்துராணி
திரு. P. வரதராஜா
திரு. R. ரமணேஸ்வரன்
திரு. M. ரவிராஜரட்ணம்
திரு. S. அம்பி
திரு. S.R. காந்தன்
திருமதி. S. ஜானகி
செல்வி. V. நளினி
திரு. K. சிவநேசன்
திரு. V.T. முரளீதரன்
திரு. M. ரவீந்திரா
திரு. M. ரவீந்திரன்
திரு. புவனேஸ்வரன்
திரு. K. S. யோகேஸ்வரன்
திரு. I. முருகேசு
திரு. R. ரமேஸ்வரன்
திரு. N. ரவிக்குமார்
திரு. K கோபிநாத்
திரு. நடராஜா
திரு. R. சிவபாலன்
திருமதி. சிவகுமாரி
செல்வி. S. ஜானகி
திரு. V. கங்காதரன்
திரு. S.சண்முகப்பிரபா
திரு. A சதா
திரு. K. திருச்செல்வம்
திரு. S. செல்லதுரை

சுபம்

இப்படிக்கு
ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன் உதித்தனன்

எமது பிறவிப் பிணியை நீக்கவும் இகபர சுகங்களைப் பெறவும் மக்கள் மனதில் உண்டான விசாரத்தைத் தீர்க்கவும் கடவுள் வழிபாடு சிறந்த சாதனமாகும். சுகதேகியானாலும் நோயாளியானாலும் செல்வந்தனாயிருந்தாலும் மனவிசாரம் விட்டகலாது. இவற்றுக்கெல்லாம் நல்வழியாக சமயத்தை முன்னின்று பல வழிகளில் பரப்பும் கொழும்பு விவேகானந்தசபையினர் 1950ம் ஆண்டு முதல் ஏகித்தப் பதியில் தொழு நோயாளர் வைத்திய சாலை வளவற்குள் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் அமைத்து பூசை வழிபாட்டைத் தன்னலம் கருதாது செய்து வந்த சேவை நன்றியும் பாராட்டுக்குமுரியது.

நாளடைவில் நாட்டிலேற்பட்ட துர் அதிஷ்ட நிலையால் 1983ன் பின் விக்கிரகமும் தொலைந்து கவனிப்பாரற்று இருந்த நேரம் வத்தளை வாழ் சைவ அன்பர்கள் வத்தளைத் தெய்வநெறிப் பொதுப்பணிமன்றம என்ற அமைப்பை உருவாக்கி அவர்களது முயற்சியால் இப்பொழுது அந்த ஆலயம் திருத்தமுற்று ஏனைய வழிபாட்டிற்குரிய விக்கிரகங்களுடன் 29.11.96ல் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலயம் என்ற பேருடன் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற இந்நன்னாளில் நாமெல்லாம் முருகனை வணங்கி எம் தேசத்திற்கும் மக்கள் எல்லோருக்கும் எல்லாச் சுபீக்ஷங்களும் ஆயுளும் நோயில்லா வாழ்வும் கிடைக்க வேண்டுமென்று வைத்தியசாலை நோயாளரும் சுகம் பெற்று வாழவேண்டுமென்றும் பிரார்த்திப்போமாக.

இந்த தெய்வத் திருப்பணிக்கு முன்னோடியாக உதவிய விவேகானந்த சபையினருக்கும் பொருள் உதவி சரீர உதவி ஆக்க ஊக்க உதவி செய்தவர்கட்கும் முருகப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்து நான் பூசிக்கும் ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரப் பெருமானையும் வேண்டி எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"உலகமுய்யத் திருமுருகன் உதித்தனன்

இப்படிக்கு

சி. குஞ்சிதபாதக் குருக்கள்

பிரதம குரு

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**என்னையும் அடியனாக்கிய வள்ளல்**

**பாதபங்கயங்கள் போற்றி**

நான் கொழும்பு பொன்னம்பலவாணேசர் தேவஸ்தானப் பிரதம குரு. கொழும்பு விவேகானந்த சபையில் ஆயுள் அங்கத்தவர், நிர்வாகக் கூட்டங்கட்குப் போவதுண்டு. அங்கு சபையில் ஹேகித்த ஆலயம் பற்றிப் பேசுவது மட்டும் எனக்குத் தெரியும்.

திரு ரவி சிவகுமாருக்கு விவாகம் செய்துவைத்த வழியில் எனக்குத் தெரியும். 25.9.91ல் என்னிடம் வந்து ஹேகித்தையில் ஒரு கோயில் உண்டு. அதைப் புதுப்பிக்க வேண்டும். அதை நீங்கள் வந்து பார்த்து வழிவகைகளைச் சொல்ல வேண்டும் என்றார். பார்க்கலாம் என்று மட்டும் சொன்னேன். இத்துடன் இவர் அகன்றிடுவார் பிரச்சினையில்லை என்று சும்மா இருந்தேன்.

27.9.91ல் ஒரு காருடன் வந்து வரவேண்டும் என்றார். நீங்கள் வேறு யாருடனாவது கதைத்துச் செய்யுங்கள் என்று மறுத்தேன். ரவி அடாப்பிடியாக நீங்கள்தான் வரவேண்டும். மறுக்கவேண்டாம் என்ற மன்றாடினார். இவர் தொல்லை தாங்கமாட்டாமல் காரில் சென்றேன். முதல் முதற் கோயிலைக் கண்டேன். நல்ல கருவறை சுவாமிகள் ஒன்றும் இலலை. என் மனத்தை இது மிகவும் வருத்தியது. பூசை செய்யவும் சரியான ஆளில்லை. இதைப் பொறுப்பெடுத்துச் செய்து தரவேண்டும் என்று ரவி மிகவும் பணிவுடன் கேட்டார். முன்பு விவேகானந்த சபையில் இதன் விஷயங்கள் பேசுவது எனக்குத் தெரியும். முயன்று பார்க்கிறேன் என்றேன். இதன் காரணமாக 24.10.91ல் விஸ்வ பிரம்மஸ்ரீ கெங்காதரம் ஆசாரியாரை அனுப்பி பார்வையிட்டு என்ன செய்யலாமென ஆலோசிக்கப்பட்டது. 18.11.91ல் மறுபடியும் ரவி சிவகுமார் நெருக்கிக் கேட்டதற்கிணங்க பிரபாகர சர்மா என்பவரைப் பூசை செய்ய வைக்கும்படி கொடுத்தேன்.

28.11.91 ல் கோயிலைப் பார்த்துப் பாலஸ்தாபனம் செய்ய ஏற்பாடுகளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஒரு நோட்டீசும் அடிக்கப்பட்டது. 30.11.91 இரவு பாலஸ்தாபன கிரியைகள் ஆரம்பித்து 1.12.91 காலை விநாயகருக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து கோயில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அப்போது பூசை செய்த பாபு ஐயரும் கவனமெடுத்து வந்தார்.

1992ம் ஆண்டுவரை திருப்பணிகள் நடந்து வந்தது. இடையில் பல இடையூறுகள் ஏற்பட்டதினால் திருப்பணி வேலைகள் தடைப்பட்டன. மிகவும் கவலையுடனிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995 ஜனவரி 20 இரவு நித்திரையில் ஒரு காட்சி. அப்போ பூசை செய்த பாப ஐயர் வந்து "மாமா எனக்கு இருக்க இடமில்லை. ஒரு இடம் தாருங்கள். என்றார்" நான் உனது அப்பா அம்மாவுடன் இருப்பதுதானே என்றேன்.. அவர்களும் இடம் தருகினம் இல்லை. ரவியுடன் பேசிக் கோயிலில் தங்கினால் என்ன என்றேன். எனக்கு இனி இடமில்லை. களனி ஆறுதான் இடம் என்றார்" இத்துடன் கண்விழித்துவிட்டேன். கனவை நான் சிந்தித்தேன்.

21.1.95 ரவி சிவகுமார் என்னிடம் வருகிறார் ஐயா! திருப்பணியைத் தொடரவேண்டும். நீங்களும் உதவியாக வரவேண்டும் என்றார். முதல்நாள் கனவும் மறுநாள் ரவியின் பேச்சும் என்னை முயலும்படி முருகன் கூறுகிறான் என்ற முடிவிற்கு வந்தேன். அவ்விடத்திய பா.உறுப்பினர் நல் முயற்சிக்கு ஊக்கம் கொடுப்பதாகத் தெரிவித்தார். எனவே அவரை முன்னோக்கமாக வைத்து 5.2.95ல் அவரைக் கொண்டு அத்திவாரம் போட்டுத் திருப்பணி மறுபடி ஆரம்பிக்கப்பட்டது.

எங்களுடைய முயற்சியும் முருகனின் திருவருளும் ஆலய நிர்வாகஸ்தர் முயற்சியாலும் பல அன்பர்கள் பணம் பொருள் உதவி என்று வாரி வழங்கியதால் ஆலய வேலைகளும் முடிந்து விக்கிரகங்களும் வரவழைக்கப்பட்டு கும்பாபிஷேக நன்னாளும் திருவருளால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எனக்குக் காலில் சுகயீனம் ஏற்பட்டுக் கொண்டது. கும்பாபிஷேகத்தைப் பின்போடவும் முடியவில்லை. வேறு ஒருவரை நியமிக்கலாமென்றால் ரவி சிவகுமாரும் நிர்வாக சபையினரும் விடுகிறார்களில்லை. ஏதோ முருகன் திருவருள் முன்னின்று நடக்கட்டும் என்று ஹேகித்தப்பதியில் வாழ் மக்கள் புண்ணியசீலர்கள். ஏனெனில் எனக்கென்ன என்று இருந்த என்னை அந்தநிலையை மாற்றி மேலான நல்ல நெறியாய ஆலய நிர்மாணத்தைச் செய்யென்று சொல்லாமல் செய்வித்து பிராமணச் சிறுவனாகிய காட்சியையும் காட்டி என்னையும் அடியானாக்கிய முருகன் புதிய கோயிலில் நிலைகொண்டுள்ளான். அவனை வழிபடும் பாக்கியப் பேறுடையவர் புண்ணியசீலர்கள். கோயில் இல்லா ஊர் பாழ். அங்கே குடியிருக்கக் கூடாது என்று தேவாரங்கள் கூறியதை நினைத்து நல்ல கைங்கர்யத்தைச் செய்தவர்கள் பொருள் சரீர உதவி செய்தவர்கள் புண்ணியவான்கள். வெளிப்படையாகவும் இரகசியமாகவும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர்கள் புண்ணியசீலர்களாவார். இந்தத் தர்மகைங்கர்யத்தை ஆரம்பித்தவர்கள் இரவு பகலாக நிர்வாக உதவிகள் செய்தவர்கள் உடல் பொருள் உதவியவர்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமானருளால் ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வர்யம் வீடுபேறு கிடைக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து எனது நல்லாசியும் முருகனின் திருவருளும் உரித்தாகுக.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி
மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து
நவை அறுகாட்சி நல்கி என்னையும் அடியனாக்கி
இருவினை நீக்கி ஆண்ட பன்னிருதடந்தோள் வள்ளல்
பாதபாங்கயங்கள் போற்றி

வேலும் மயிலும் துணை

இப்படிக்கு
சி. குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதிஷ்டா குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## ஆலய குருக்களின் ஆசி



மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவலும் துதிக்க நின்ற இராறு தோள் போற்றி
காஞ்சி மாவடி வைதன் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

வத்தளையிலுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய கும்பாபிஷேகம் தாது வருஷம் கார்த்திகை மாதம் 14ம் நாள் வெள்ளிக்கிழமை 29.11.96 நடைபெறுகின்றது. ஆரம்பத்தில் பல இன்னல்களின் மத்தியில் வத்தளை வாழ் மக்களின் விடா முயற்சியின் பணியால் இன்று ஓர் ஆலயமாகி வள்ளி தெய்வானை சகிதம் சிவ சுப்பிர மணியராக காட்சி தருகின்றார். இக் கோலம் வத்தளை வாழ் பக்தர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம்.

இந் நேரத்தில் இக் கோயிலில் பிரதம குருவாக பணியாற்ற எனக்கு கிடைத்த சந்தர்ப்பம் யான் பெற்ற பேறுகளில் பெறும் பேறாக கருதுகிறேன். இச் சந்தர்ப்பத்திலே பலரும் இம் மலர் அருள் மணத்துடனும் நறு மணத்துடனும் மலர்ந்து மணம் பரப்ப எல்லாம் வல்ல முருகப் பெருமானை வணங்கி ஆசி கூறுகிறேன்.

சுபம்

இரா பாலசுப்பிரமணிய சர்மா.
(தேவஸ்தான பிரதம குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்லைவரின் ஆசியுரை



உலகில் எல்லா மதங்களும், அதன் போதனைகளும் சகல அடியார்களுக்கும் நல்வழி ஒன்றையே போதிக்கின்றன. அதன் அடிப்படையில் தாங்கள் வசிக்கும் பூமியில் தங்கள் வழிபாட்டுக்கென்று ஒரு ஆலயம் அமைந்துவிட்டால் அவர்களுக்கு அதைவிட வேறு பாக்கியம் எதுவுமில்லை.

பல வருட காலங்களாக வத்தளை வாழ் இந்து அடியார்கள் வழிபாட்டுக்கென்று ஒரு ஆலயம் இல்லாதிருந்தது பெரும் குறையாகவே இருந்தது. இதைப் போக்க பல வழிகளிலும் பலர் முயற்சி செய்தமை மறக்க முடியாதது.

1989ம் வருட இறுதியில் வத்தளையில் ஒரு ஆலயம் அமைப்பதற்கு வீடுவீடாகச் சென்று அபிப்பிராயங்களைப் பெற்று இன, மத மொழி வேறுபாடில்லாத ஒரு மன்றத்தை "தெய்வ நெறி பொதுப்பணி மன்றம்" என்ற பெயரில் அமைத்தோம்

இதன் மூலம் வத்தளையில் ஒரு காணி எடுத்து ஆலயம் அமைப்பதற்கான வசதிகள் எம்மிடமிருக்கவில்லை. ஆகவே மன்றத்தின் அபிப்பிராயப்படி பல ஆண்டுகளுக்கு முன் தொழுநோயாளர் வைத்தியசாலை வளவுக்குள் கொழும்பு விவேகானந்த சபையாலும், சைவ பிணியாளர் சங்கத்தாலும் அமைக்கப்பட்ட ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம்" பாழடைந்த நிலையிலிருந்ததால் அதை பொதுமக்கள் தரிசனத்துக்காக கையேற்க முற்பட்டோம்.

பல இன்னல்களுக்கு மத்தியில் அவ்வாலயத்தை கையேற்றதுடன் பொதுமக்கள் வசதிக்கேற்ப அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இதனால் நாம் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள் நிந்தனைகள், அவமானங்கள் ஒன்றிரண்டல்ல. இவற்றையெல்லாம் ஆண்டவனுக்கே சமர்ப்பணம் செய்து, முயற்சியை கைவிடாது முன்னெடுத்து சென்றோம். அவ்வேளைகளிலெல்லாம் எம்மோடு சேர்ந்து பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வழிபாடுகள் செய்த சகல அடியார்களின் பிரதிபலனே இந்த ஆலயம் இப்படி அமைந்து மகாகும்பாபிஷேகம் காண்பதற்கான அடிப்படைக் காரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று முதல் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர பிரதம குரு பிரதிஷ்டா பூஷணம் பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாத குருக்கள் எமக்கு வழங்கி வந்த அறிவுரைகளும், வழிகாட்டல்களும் ஆலயம் அமைப்பதற்கும், மகா கும்பாபிஷேகம் காண்பதற்கும் பெரும் உற்சாகத்தையும், மனத்தைரியத்தையும் ஏற்படுத்தியது மறக்க முடியாதது.

இவ்வாலயத்தை எமக்கு கையளித்த சைவ பிணியாளர் சங்கத்துக்கும், கொழும்பு விவேகானந்த சபையினருக்கும், அரச சுகாதார அமைச்சுக்கும், இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்கும், அவ்வப்போதிருந்த அரசாங்கங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாவிதத்திலும் எமக்கு உறுதுணையாகவிருந்த "வத்தளை தெய்வநெறி பொதுப்பணி மன்ற" சகல அங்கத்தவர்களுக்கும், தற்போதைய, ஆலய பரிபாலன சபையினருக்கும் இவ்வாலயத்தை இறைவனின நியதிப்படியே கட்டியெழுப்புவதற்கு சகல விதத்திலும் உதவிகள் புரிந்த அனைத்து அடியார்களுக்கம் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வத்தளை வாழ் சகல மக்களின் தரிசனத்துக்காக நாம் பல கண்ணீர் துளிகளை சிந்தி அமைத்த இந்த ஒரு துளி முயற்சி பல துளிகளாக பெருகி குளமாக, நதியாக, சமுத்திரமாக பெருக்கெடுத்து நாட்டில் சகல இன மக்களும், சாந்தி சமாதானம், மன நிம்மதி பெற்று வாழ பிரார்த்திப்போமாக!

நன்றி

இப்படிக்கு
ரவி சிவகுமார்.
(ஆலயபரிபாலன சபைத் தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# දේවස්ථාන සභාපති තුමාගේ පතිවිඩය

සෑම ආගමකින හා දර්ශනයකින් ගෙන හැර පාන්නෙ නම බැතිමතුන්ට සහ මග පෙන්විමයි. එමෙන්ම තම තමන්ගෙ ආගම යැදිම සඳහා පූජණීය ස්ථානයක් තමන් වාසය කරන ප්‍රදේශයේම පැවැත්මත් මහත් භාග්‍යයක්. වසර ගනානාවක්ම වත්තල ප්‍රදෙශයේ වෙසෙන හින්දු බැතිමතුනට දේවස්ථානයක් නොමැති වීම විශාල අඩුපාඩුවක් තිබුනි.

දේවස්ථානයක් ලබා ගැනිමට වත්තල වෙසෙන හින්දු බැත්මතුන් හැකි සැම උත්සහයක්ම යෙදුනත් ඒ සැම උත්සහයක්ම අසාර්ථක විය.

1989 අග බාගයේදි දේවස්ථානයක් ලබා ගැනිමේ උතුම් අදිටනින් ගෙයින් ගෙට කරන ලද සම්සපනයකදී, හින්දු දේවස්ථානයක අවශ්‍යතාවය මනාව වැටහී යන ලදි.

මේ උතුම් වූ අදිටනින් බිහිවූ "වත්තල ආගමික හා සුභ සාධක සමිතිය" වත්තල ප්‍රදේශයේ දේවස්ථානයක් ඉදිකිරිමට ඇති සැම පහසුකමක්ම සලකා බැලූ අවස්ථාවේදි, හෙකිත්ත ලාදුරු රෝහල් හම්යේ පිහිටි එම රෝගින් වෙනුවෙන් ඉදිවූ ශ්‍රී සිවසුබ්‍රමනිය ස්වාමි දේවස්ථානය කෙරෙහි ඔවුන්ගේ අවධානය යොමු විය.

කොළඹ විවේකානන්ද සමිතිය හා ලාදුරු රෝගින්ගේ හින්දු සමිතියේ ආශිර්වාදයෙන් කරන ලද උත්සාහයෙන් අනතුරුව හින්දු සංස්කෘතික කටයුතු අමාත්‍යංශයේ මගපෙන්විමෙන් සෞඛ්‍ය අමාත්‍යංශයෙන් ලැබූ, අනුමැතිය හේතු කොට ගෙන මෙම දේවස්ථානය වත්තල වාශි හින්දු බැතිමතුන්ට වැදුම් පිදුම

මෙම දේවස්ථාන හම්යේ අප හෙථ කදුලු හෙථ සෝ සසුම් අනන්තය. අප ලබා ගත් ගෞරවයන්ට වඩා අප අගෞරවයට පත්වූ අවස්ථා බෝහෝය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඒන් ඒ හැම දුෂ්කරතා මධ්‍යයේ වුවද මෙම දේවස්ථානය ගොඩ නැගීමේ අදිශ්ඨානයෙන් යුතුව දෙවියන්ට කරන ලද කන්නලව්වේ ප්‍රතිපඵලයකි, අද අප දකින මේ දේවස්ථානයේ මහා කුම්භාබිෂේක පූජා උත්සවය.

අවුරුදු 6ක කාල සීමාවක් තුලදී අප හා මෙම උතුම් ප්‍රයත්නයේ යෙදී සිටි සියළු දෙනා අප මේ අවස්ථාවේදී ඉතා ගෞරවයෙන් හා කෘතඥ පූර්වකව මතක් කිරීමට කැමැත්තෙමු.

කොළඹ පොන්නම්බල වානේෂ්වර කෝවිලයේ ප්‍රධාන පූජක ශිව ශ්‍රී කුන්චිතපාත කුරුක්කල් පූජක තුමා අපහට දුන් උපදෙස් මග පෙන්වීම් අප අමතක කල නොහැක.

ඒ වකවානුවල පිහිටි රාජ්‍ය අයතන වලින් අප දේවස්ථානයට ලැබුනු නොමසුරු සහයෝගයි, ලබා දුන් අනුමැතියන් අප ඉතා අගය කොට සලකමු.

මෙම දේවස්ථානය ගොඩ නැගීමට මුදලින් ද්‍රව්‍යම වශයෙන් හා හැකි සැම අයුරකින්ම උදව් උපකාර වූ සැම හින්දු බැතිමතුන්ට අපගේ හෘදයංගම පූර්ව කෘතඥ තාවය හිමිවිය යුතුයි.

දෙවියන්ගේ ආශර්වාදයෙන් අප කරන ලද මේ ප්‍රයත්නයෙන් දේව ආශිර්වාදය සැම බැතිමතුන්ට ලැබී රටේ සාමය සමෘද්ධිය සෞභාග්‍ය උදා වේවායයි පතමු.

රවි සිවකුමාර්
සභාපති
දෙවස්ථාන පරිපාලන සභාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'நாடு உனக்கு என்ன செய்தது என்றிராதே நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்றிரு'**

என்று கூறினார் உலகப் பேரறிஞர் ஒருவர். வத்தளை வாழ் எம் இன மக்களுக்கு இன்று எத்தனையோ அன்றாட தேவைகளிருந்தும் அவை எதுவுமே நிறைவு பெற்றதாக தெரியவில்லை.

இப்படியான ஒரு காலகட்டத்தில் இன. மத. மொழி வேறுபாடில்லாமல் வத்தளையில் செறிந்து வாழும் எமக்கு முதல் முயற்சியாக ஒரு ஆலயம் அமைக்கப்பட்டுவிட்டதே என்று எண்ணும்போது உள்ளம் அடையும் பூரிப்புக்கு எல்லையே இல்லை. இதற்கெல்லாம் முதற் காரணம் திருமுருகப் பெருமான் எமக்களித்த திருவருளும். நாம் இடைவிடாது எடுத்த முயற்சியும். உங்கள் ஒவ்வொருவருடைய ஆதரவும்தான்.

1990ம் ஆண்டு பாழடைந்த நிலையிலிருந்த இவ்வாலயத்தை நாம் கண்ணுற்று மனமுருகிய நிலையில் என்ன செய்யலாம் என்று எண்ணி, வத்தளையில் பன்னெடுங்காலங்களாக வாழும் இளம் துடிப்பும், துணிவும், புத்திசாதுர்யமும் கொண்ட ஒரு சமூக தொண்டரை சந்தித்தோம். அவர்தான் இன்று இவ்வாலயத்தின் பரிபாலனசபைத் தலைவர் திரு. ரவி சிவகுமார் அவர்கள்.

அவரின் தலைமையின்கீழ் "வத்தளை தெய்வநெறி பொதுப் பணிமன்ற"த்தை நிறுவி ஆலயத்தை கையேற்பதற்கு நாம் கடந்து வந்த பாதையில் அனுபவத்த துன்பங்கள், துயரங்கள் ஒன்றிரண்டல்ல. அவ்வேளைகளில் எம் தோளோடு தோள் நின்று உற்சாகப்படுத்தி முன்னோக்கி செல்வதற்கு ஒத்துழைப்பளித்த இளம் உள்ளங்கள் பல இன்று எம்மோடு இல்லாவிட்டாலும் அவர்கள் ஒவ்வொருவரையும் நாம் என்றும் மறக்கமாட்டோம். அவர்களில் சிலர் கடல் கடந்து இருந்தாலும், இன்னும் எம்மை விட்டகலவில்லை.

ஆலயத்தை கையேற்கும்போது ஒரு விபூதிப் பிரசாதத்துக்குக் கூட வழியில்லாமல் திணறிப் போயிருந்த வேளைகளில் எமக்கு அவ்வப்போது எல்லாவிதத்திலும் உதவி ஒத்தாசை வழங்க எத்தனையோ நல்மனம் படைத்த அடியார்கள் முன்வந்தார்கள். அதைப்போல் ஆலயத்தை பராமரிக்க முடியாத நிலையிலிருந்தபோது நீங்களும் ஒரு அங்கத்தவராக சேர்ந்து மாதாந்த நிதி வழங்கி கைகொடுத்துதவியதை என்றும் மறக்கமுடியாதது.

ஆலயத்திருப்பணிகளை ஆரம்பித்து மகாகும்பாபிஷேகம் காண்பதற்கு இரவு பகல் பாராது ஒன்று சேர்ந்து ஒத்துழைத்த எமது நிர்வாக சபை உறப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆலய திருப்பணி வேலைகளுக்கு எமக்கு நிதியுதவி, பொருளுதவி வழங்கி ஆலய வளர்ச்சிக்கும், மகா கும்பாபிஷேகத்துக்கும் ஒத்துழைப்பளித்த வர்த்தக பிரமுகர்களுக்கும் எமது ஆலய பரிபாலன சபையின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

நன்றி

இப்படிக்கு
மா. முத்துக்குமார்
ஆலய பரிபாலனசபை பொதுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

නීල් රූපසිංහ
ගම්පහ දිස්ත්‍රික්ක පාර්ලිමේන්තු මන්ත්‍රී
නිවසේ
111, මීගමු පාර,
වත්තල

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

දුරකථන 930666
931848
ෆැක්ස් 930434

1996.11.20



25.000 කට පමණ අධික ද්‍රවිඩ ජනතාවක් වෙසෙන වත්තල මැතිවරණ කොට්ඨාශයේ හින්දු බැතිමතුන්ට තම ආගමික කටයුතු වල නිරතවීමට සුදුසු ස්ථානයක් නොමැතිවීම කලක සිට පැවති අඩුපාඩුවකි.

ද්‍රවිඩ ජනතාවගේ ඒකරාශීවීම තුරුස්නා කොටස් කලක සිටම ජනතාවගේ අවශ්‍යතා ඉටුකරනවා වෙනුවට ඔවුන් රවටා තමන් වෙත රඳවා ගැනීමට කටයුතු කිරීම නිසා ද්‍රවිඩ ජනතාව පාලකයින් ප්‍රතික්ෂේප කිරීමට පෙලඹී ඇත. එම වාතාවරනය තුළ අප විසින් ද්‍රවිඩ ජනතාවට දුන් පොරොන්දුවක් ඉටුකරමින් ඔවුනගේ ආගමික කටයුතු කරගෙන යෑම සඳහා හැඳල, හේකිත්ත සිවසුබ්‍රමනියම් දේවාලය පිහිටුවීමට කටයුතු කර ඇත.

සිවසුබ්‍රමනියම් දේවාලයේ කුම්භාබිෂේඛ කිරීම - 1996.11.29 වෙනි දිනට යෙදී ඇති අතර එම උත්සවය සාර්ථක වේවායි පතමි.

**கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்**

**திரு. நீல் ரூபசிங்க அவர்களின் ஆசிச் செய்தி**

25ஆயிரம் தமிழ் மக்கள் வாழும் வத்தளைத் தேர்தல் தொகுதியில் நீண்ட காலமாக இந்து அடியார்களுக்கு அவர்களின் வழிபாட்டுக்காக ஏற்ற தொரு ஆலயம் இல்லாதிருந்தது பெருங் குறையாகவே இருந்தது.

தமிழ் மக்களை ஒன்றிணைத்து, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதை தவிர்த்து, அவர்களை பலமுறை ஏமாற்றியதால் நிர்வகித்தவர்களைக் கூட மக்கள் நிராகரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இக்காலகட்டத்தில் எம்மால் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதியின் நிமித்தம் அவர்களுடைய மத அனுஷ்டானங்களை கடைபிடிப்பதற்கு ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தை அமைப்பதற்கு நாம் மிக ஒத்துழைத்தோம்

29.11.96 அன்று நடைபெறவிருக்கம் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எனது மனமார்ந்த நல்லாசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் துணை

# பொருளாளரின் ஆசிச் செய்தி



"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆண்டோர் வாக்கு. ஆனால் கோவில் இருந்தும், அது பூரணத்துவம் அடையாத நிலையில் வணங்குவதும் ஒரு வகை பாவமே. அதாவது கும்பாபிஷேகம் நடைபெறாத நிலையில், நம் மத்தியில் அனைவரின் மனங்களிலே ஏதோ குறையோடும், சுதந்திரமற்ற மன நிம்மதியற்ற சூழ்நிலையில் வாழுகின்ற சந்தர்ப்பத்தில் கும்ப அபிஷேகம் எனும் கும்பங்களுக்கு உயிரூட்டி அந்த நீரினால் விக்கிரகங்களுக்கு அபிஷேகம் செய்து உயிர் கொடுக்கும் அந்த நன்நாள் நிறைவுபெற உதவிய எல்லா உள்ளங்களுக்கும் அருள்கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தாபனம் நடைபெற்ற நமது ஆலயம், இப்போதைய குறுகிய காலகட்டத்துக்குள் எத்தனையோ நல்மனம் படைத்த அன்பர்கள், அடியார்கள், ஆதரவாளர்கள் அன்பு மனம் கொண்டு பல அளப்பரிய உதவிகளைச் செய்ய முன் வந்தமை எமக்கு மிகுந்த உற்சாகத்தினையும் ஊக்கத்தினையும் தருகின்றது. இந்த உயர்மனம் கொண்ட அனைவருக்கும், மேலும் நடைபெறவுள்ள ஆக்க வேலைகட்கு உதவிபுரிய முன்வருவோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இதற்கென அயராது உழைத்த எமது நிர்வாகக் குழு அங்கத்தவர் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டு இன்னும் இந்த தேவஸ்தான வளர்ச்சிக்கான விடயங்களில் ஆவன செய்ய இன்றும் என்றும் எப்பொழுதும் அனைவரும் முன்வந்து ஒத்துழைப்புத் தரவேண்டுமென அன்படனும் பணிவுடனும் கேட்டுக் கொள்கிறோம்

"கோபரங்கள் எழும்பட்டும்! அடியார் குறைகள் அனைத்தும் நிறைவு பெறட்டும்"

இப்படிக்கு
எம். சண்முகவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**John A. E. Ameratunga**, M.P.
Attorney - at - Law, J. P. U. M.
T'phone: 536570
536029
Fax: 536970

88, Negombo Road,
Kandana.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

19th November 1996



Message from

## John A. E. Amaratunga,
## Member of Parliament - Gampaha District

It is a great pleasure for me to convey my wam greetings and best wishes on this memorable occasion of opening of Sri Sivasubramaniyar swamy Kovil at Hekitta, Hendala, Wattala. A Hindu Temple was indeed a long felt need of the Hindu community of the area to perform their religious activities. I sincerely wish to thank the Organizers and the well wishers of this religious Project.

## கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
## திரு. ஜோன் ஏ.ஈ. அமரதுங்க அவர்களின்
## ஆசிச் செய்தி

வத்தளை ஹேகித்தயில் அமையப் பெற்ற ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் மிக மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்ட காலங்களாக இத் தொகுதியில் வழிபாட்டுக்காக ஒரு இந்து ஆலயம் மிக தேவையாகவே இருந்தது. இப்படி ஒரு வழிபாட்டுத் தலத்தை அமைப்பதற்காக ஒழுங்குகள் செய்த ஆலய பரிபாலன சபையினருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த சபைப் பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஹெந்தளை தொழுநோயாளர் ஆஸ்பத்திரி வளவில் சிறப்பான ஓர் ஆலயத்தை அமைத்து இன்றைய தினம் குடமுழுக்குச் செய்கிறார்கள் என்பதைக் கேட்டதும் விவேகானந்த சபையின் செயலாளராகிய நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

இக் கோவில் சிறிய அளவில் 1955ம் ஆண்டில் விவேகானந்த சபையால் தொழுநோயாளர்களுக்கெனக் கட்டப்பட்டு 1956ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்யப்பட்டது. மூலமூர்த்தியாக முருகப் பெருமான் எழுந்தருளினார். தற்போது வத்தளை தெய்வநெறி பொதுப்பணி மன்றத்தின் ஊக்கத்தினால் இப்பகுதியில் வாழும் சைவமக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைக்கப்பட்டுள்ளது. அவர்களது பெருமுயற்சியை நாம் பாராட்டுகின்றோம். மேலும் இவர்களுக்கு உறுதுணையாக இருந்து எல்லா வகையிலும் வழிகாட்டியாக இருக்கின்ற பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களையும், மன்றத்தின் அங்கத்தவர்களையும், இப்பணிக்குப் பொருளுதவி செய்த பெரியோர்களையும் வாழ்த்துகின்றேன்.

சிவஞானச்செல்வன்
க. இராஜபுவனீஸ்வரன் (J.P.)
கௌரவ பொதுச் செயலாளர்,
விவேகானந்த சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பக் கலை ஒரு சிறந்த கலை



சிற்பக் கலை மிகவும் சிறப்பானது என்று சொன்னால் மிகையாகாது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இது உருவான தாயினும், இன்றைய நவீன காலத்தின் பல புதிய கண்டு பிடிப்புகளுக்கு மத்தியிலும் தன்னிலை குன்றாது தன் நிகரற்ற தன்மையோடு உலகெங்கும் சிறந்து விளங்குகின்றது. இதற்கு காரணம் யாதெனில் கலை வடிவங்களின் கலை நுணுக்க தன்மையேயாகும். இக் கலையானது மூதாதையர்கள் வழிவந்த பரம்பரை கலையாகும். அன்னை கருமாரியின் அருளாலும், முருகப் பெருமானின் கிருபையாலும் இவ் ஆலயத்திற்கு திருப்பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இச் சந்தர்ப்பத்தில் எனக்கு குருவாக இருந்து என்னை வழி நடத்திய எனது மாமனாருக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ் வாலய சிற்ப வேலைகளை நிறைவேற்றுவதற்கு மிகவும் குறுகிய கால அவகாசமே தரப்பட்டது. இக் குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியுமாவென நினைத்த வேளையில் முருகப் பெருமானின் அருளால் இனிதே நிறைவேறும் என உள்ளணர்வு சொன்னது. அது மட்டுமல்லாமல் ஆலய குருக்கள் பாலு ஐயாவும், நிர்வாக சபையினரும் எனக்கு அளித்த உற்சாகத்திற்கும், ஒத்துழைப்பிற்கும் நன்றிகூற கடமைப் பட்டுள்ளேன்.

ஏற்ற பணியை சிறப்பாகவும், விரைவாகவும் நிறைவேற்ற அயராது உழைத்த எனது உதவியாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு

அராலியூர் மார்க்கண்டு காண்டீபன்

(ஆலய சிற்பக் கலைஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய பிரதம காப்பாளர்கள் கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலய பிரதம குரு சி. குஞ்சிதபாத குருக்கள், ஆலயபிரதம குரு பாலசுப்பிரமணிய சர்மா ஆகியோருடன் இருந்து எடுத்துக் கொண்ட படம். (இடமிருந்து வலம் திரு. பி. சண்முகராஜா, திரு. ஆர். கந்தசாமி, ஆலய பிரதம குரு. பிரதம குருக்கள், திரு. எம்.பி. பாலதுரை, திரு. ஏ. முத்தையா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய புனிதத்தைக் காப்போம்

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றியது நமது இந்து சமயம் என்பது நாம் எல்லோருமே அறிந்தது. இப்படியான எம் மதத்தை கட்டிக் காப்பது எம் எல்லோருடைய கடமையுமாகும்.

நமது மதத்துக்கு மாறான விதத்தில் இன்று சில ஆலயங்களிலே புனிதமற்ற முறையில் சிலர் நடந்து கொள்கிறார்கள். பூஜை, தரிசனங்களுக்கு வரும் அடியார்களுக்கு இது பெரும் இடையூறாகவும், அருவருப்பாகவும் கூட இருக்கின்றன. இவ் விடயங்களில் பெரும்பாலும் இளைஞர், யுவதிகள் முன் மாதிரியாக நடந்து காட்ட வேண்டும்

ஆலயங்களிலே சிலர் கூந்தலை விரித்து வந்து தரிசனம் செய்வது நமது மதத்துக்கு மாறானது. இது ஒரு சிலருக்கு நாகரிகமாகத் தெரியலாம். ஆனால் நாகரிகம் என்பதற்கே இது அப்பாற்பட்டது.

அதைப்போல் ஆலங்களிலே வீண் பேச்சுக்கள் பேசுவதும், வம்பளப்பதும், வீட்டுக் கதைகள் கதைப்பதும் பழக்கத்துக்கு வந்துவிட்டது. இவைகளை நாம் கூடிய வரை தவிர்த்துக் கொள்வதுடன் ஆலயத்தில் ஒரு அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்த முயல வேண்டும். அப்டியானவைகளிலிருந்து கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, சொற்பொழிவுகள் நடத்தி காலாத்தை பயன்படுத்தலாம்.

இதேபோல் ஆலயங்களிலே இறை தொண்டு புரியும் நமது குருக்கள்மாரும் பூஜை செய்து, காளாஞ்சியைக் கையிலே கொடுத்துவிட்டால் போதும் என்ற நிலை மாறி, குறைந்தது ஒரு ஐந்து நிமிடமாவது நமது மதத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கதைத்தால் அதிலே அடியார்கள் எவ்வளவோ திருப்தியடைவது மட்டுமல்லாமல் நிறைய பயன்களையும் பெறுவார்கள்.

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ற பொன்மொழிக்கேற்றவாறு நாம் நடந்து மற்றவர்களையும் நடக்கச் செய்து ஆலய புனிதத்தை மாசுபடுத்தாது கட்டிக் காப்போமாக!.

-ஓர் அடியார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும், மதமாற்றமும்

உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் ஒரு மஹா புருஷரால் அந்தந்தக் கால தேசத்துக்கு ஏற்றவாறு தோற்றுவிக்கப்பட்டது. நமது இந்து மதம், ஒருவரால் காலத்திற்கேற்றவாறு தோற்றவிக்கப்படாமல், உலகம் தோன்றின முதல், ஆண்டவராலேயே தோற்றுவிக்கபப்பட்டு, எல்லா காலத்திற்கும், எல்லா மக்களுக்கும் ஏற்ற வகையில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய வரலாறு காணாத இந்து மதத்தில் பிறந்தமைக்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

"நான் ஒரு இந்து! இந்து மதத்தவன் என்பதில் பெருமைப்படு கின்றேன்! நான் எல்லா மதத்தினரையும் நேசிக்கின்றேன்! ஆனால் இந்து மதத்தினனாகவே வாழ விரும்புகின்றேன், என்று கவிஞர் கண்ணதாசன் ஓரிடத்தில் மிக அழகாக, ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

குறிப்பாக, இந்து சமயத்தில் உள்ளவனுக்கு தன் மத அமைப்பின் மூலம் கிடைக்கும் நிம்மதி வேறு யாருக்கும் கிடைப்பதில்லை. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு புத்தி ஜீவன்களும் தன் மதத்தின்மீது ஆழ்ந்த பற்று வைக்க வேண்டும். "எம்மதமும் சம்மதம்" என்றிருக்கலாமே தவிர, எமக்கென்ற இந்துமதத்தை, மற்ற மதத்தினர் எள்ளிநகையாடும் அளவிற்கு இன்று எம்மக்கள் பலர் "மதமாற்றம்" என்ற மாயவலையில் சிக்கித் தவிக்கின்றனர். இப்பரிதாப நிலையானது நம்மை நாமே கொலை செய்வது மட்டுமல்ல. நம் மதத்தையே கொலை செய்வதற்கு சமம். வயது வர, வர சில நம்பிக்கை மாறக் கூடாது.

எப்போது நமக்குத் துயரம் தொடர்ந்து வருகிறதோ அப்போதே நாம் இறைவனின் பார்வைக்கு இலக்காகி விடுகின்றோம் என்றுதான் அர்த்தம். உண்மையான பக்தனைத்தான் இறைவன் சோதிக்கின்றான் என்பதை நம்மவர் ஏனோ மறந்து விடுகின்றனர். சிறிது துன்ப துயரங்கள் வந்தவுடன் மற்ற மதத்தினரின் போலி வார்த்தைகளுக்கு தன்னையே அர்ப்பணித்து மதம் மாறுவது வருந்தத்தக்க விஷயமாகும். இதற்கு முதற் காரணம் மனப் பக்குவம் இல்லாமையே. மனப்பக்குவம் இல்லாதவன் நினைத்தபடி எல்லாம் நடக்கிறான். ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு. இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை. எனவே இனிமேலாவது மதமாற்றத்திலிருந்து மீள்வோமாக.

திருமதி சரஸ்வதி கனகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னலைப் போக்கிடுவார்

வத்தளையில் வதிவோருக்கு நித்தமும் அருள்புரிய வந்துதித்த ஆலயமாம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நோயாளர் பிணி தீர்க்க
புறப்பட்ட எம்பெருமான்
அடியார்க்கு அருள் புரிய
அமர்ந்து விட்டார் சந்நிதியில்

எல்லா இனத்தவரும்
இனிதே வாழுகின்ற
ஹேகித்த வத்தளையில்
எல்லா மதத்தவரின்
இனலையும் போக்கிடுவார்

எழில்கொண்ட ஹெந்தளையில்
எமில்டன் குளத்தருகே
ஹேகித்த சிற்றூரில்
எம்பெருமான் திருவருளை
ஏற்றிப் போற்றிடுவோம்
என்றும் வணங்கிடுவோம்

- K. கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான பரிபாலன சபையினர், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலய பிரதம குரு சி. குஞ்சிதபாத குருக்கள், ஆலய பிரதம குரு பாலசுப்பிரமணிய சர்மா ஆகியோருடன் இருந்து எடுத்துக் கொண்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும், வாழ்த்துக்களும்

இவ்வாலயம்வளர்ச்சி பெறவும், திருப்பணி வேலைகளுக்கும் மஹா கும்பாபிஷேகத்துக்கும் உதவி ஒத்தாசை அளித்த பின்வருபவர்களுக்கு எமது நன்றியும் நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக.

* கொழும்பு பொன்னம்பலவாணேசர் பிரதம குரு C. குஞ்சிதபாதக் குருக்களுக்கும், கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட சகல மத குருமாருக்கும்.
* சைவப் பிணியாளர் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, சுகாதார அமைச்சு, இந்துசமய கலாச்சார அமைச்சு, அவ்வப்போது இருந்த அரசாங்கங்கள்.
* வத்தளை தெய்வநெறி பொதுப்பணிமன்ற அங்கத்தவர்கள்.
* கம்பஹா மாவட்ட வத்தளை பாராளுமன்ற, மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுஜன ஐக்கிய முன்னணி தமிழ் அமைப்பு.
* பொருளுதவி, பணஉதவி, சரீர உதவிகள் வழங்கிய நல்மனம் படைத்த சகல வர்த்தகப் பெருமக்கள்.
* வத்தளை பேலியகொட, கழனி பொலிஸ் பகுதி அதிகாரிகள்.
* வீரகேசரி பத்திரிகை நிறுவன ஆசிரிய பீடம். F. M.99 தமிழ் சேவை பணிப்பாளர் திரு எஸ். தில்லைநாதன் அவர்கள்.
* ஆலய சிற்பக் கலைஞர் அராலியூர் மார்க்கண்டு காண்டீபன் குழுவினர், கட்டிட வேலைகள் செய்த ரவீந்திரா குழுவினர்,
* ஆலய வளர்ச்சிக்கு அன்று முதல் இன்று வரை பிரார்த்தனை நடாத்தி எம்மை உற்சாகப்படுத்தி ஒத்துழைப்பு தந்த அடியார்கள்.

ஆலய பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org